**CC.15/2023** Dt: 19.01.2024

எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.132/2024 Dt–05.01.2024ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.1 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of January 2024.

19.01.2024

அ.சா.1–லெட்சுமி

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**குறிப்பு:** சாட்சி 26.06.2023ம் தேதி முதல்விசாரணையில் கூறிய சங்கதிகள் நினைவூட்டலுக்கு பின்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) எனது கணவர் முதுகுளத்தூரில் இரும்பு கடை வைத்துள்ளார். எனது கணவர் முதுகுளத்தூர் கடைக்கு எனது வீட்டிலிருந்து காலை 10.45 மணியளவில் சென்றார். எனது கணவர் விபத்தில் அடிபட்டதாக எனது அண்ணன் முருகேசன் போன் மூலமாக எனக்கு மதியம் 01.30 மணியளவில் தகவல் கூறினார். நான் சம்பவ இடத்திற்கு மதியம் 02.00 மணியளவில் சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு ஆட்டோவில் வந்தேன். போலிசார் என்னை தனிப்பட்ட முறையில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2) கீழத்தூவல் காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். புகார் மனு யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். ஆம்புலன்சில் எனது கணவரை அழைத்து சென்றார்கள். ஆம்புலன்சில் எத்தனை மணிக்கு அழைத்து சென்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. ஆம்புலன்சில் அனுப்பிவிட்டு நான் காவல்நிலையத்திற்கு வந்துவிட்டேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கூறுவதுபோல் எந்தவிதமான

சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல